பக்கங்கள் – 12
விலை – ரூபா 50
Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 321
சனிக்கிழமை
12 ஒக்ரோபர் 2024
புரட்டாதி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"இனிமேல் காது புளிக்க புளிக்க புளுகுப்போட்டியை பார்க்கலாம் பாருங்கோ"

நாடாளுமன்றத் தேர்தல்

# வடக்கில் இம்முறை 91 தரப்புகள் களத்தில்!

## 45 அரசியல் கட்சிகள்

## 46 சுயேச்சைக் குழுக்கள்

**யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 12**

**ஸ்ரீலங்கா நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் இம்முறை, அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுமாகச் சேர்த்து 91 தரப்புகள் களமிறங்கியுள்ளன. அவற்றில் 45 அரசியல் கட்சிகளும், 46 சுயேச்சைக் குழுக்களும் உள்ளடங்குகின்றன.**

11



# அணுவாயுதத்துக்கு எதிராக அமைதிக்கான நோபல்!

டோக்கியோ, ஒக். 12

அணுவாயுதத்துக்கு எதிரான செயற்றிட்டங்களை தன் வாழ்நாள் கொள்கையாக வரித்துக் கொண்டுள்ள, ஜப்பானிய அமைப்பான நிஹான் ஹிடாங்கியோவுக்கு இந்த வருட அமைதிக்கான நோபல் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹிரோஷிமா மற்றும் நாகசாகியில் நடந்த அணுகுண்டுத் தாக்குதலில் உயிர் பிழைத்தவர்களை அடிப்படையாகக் கொண்ட இந்த இயக்கம், ஹிபாகுஷா என்றும் அறியப்படுகிறது. அணு ஆயுதம் இல்லாத உலகை அடைவதற்கும், அணு ஆயுதங்களை மீண்டும் பயன்படுத்தக் கூடாது என்பதை சாட்சிகளின் மூலம் நிரூபிக்கவும் பாடுபடுகிறது.

11

## 196 ஆசனங்களுக்காக 690 குழுக்கள் போட்டி

கொழும்பு, ஒக். 12

நாடாளுமன்றத்தில் 196 ஆசனங்களைக் கைப்பற்றுவதற்காக 22 தேர்தல் மாவட்டங்களிலும் 690 குழுக்கள் போட்டியிடுகின்றன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

11

## இன்றுமுதல் பரப்புரைகள்

கொழும்பு, ஒக். 12

பொதுத்தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று நிறைவடைந்த நிலையில், இன்று முதல் தீவிர பரப்புரைகள் ஆரம்பமாகவுள்ளன.

தேசிய ரீதியிலான பிரதான அரசியல் கட்சிகள் தொகுதி மற்றும்

11

## தாழமுக்கம் வலுநிலை வடக்கில் கனமழை!

யாழ்ப்பாணம், ஒக். 12

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று வலுப்பெற்று வருவதால், வடக்கில் விரைவில் கனமழைக்குச் சாத்தியம் உள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப்

11

## பச்சிளம் சிசு உயிரிழப்பு!

மாதிரிகள் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த 8ஆம் திகதி பிறந்த சிசுவொன்று மறுநாள் உயிரிழந்துள்ளது.

11

## போர்க்குற்றங்களுக்கு எதிரான உள்ளக விசாரணைகள் தேவை

### இல்லையேல் நிலைமை இறுகுமென அரசுக்கு ஆலோசனை

கொழும்பு, ஒக். 12

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்படவேண்டும். இல்லையேல் குற்றம் சாட்டப்பட்டவர்கள் எந்த நாட்டில் வைத்தும் கைது செய்யப்படலாம்

11

## ஓமந்தை வாள்வெட்டு காயமடைந்தவர் பலி!

வவுனியா, ஒக். 12

ஓமந்தை, கதிரவேலு பூவரசன்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாள்வெட்டில் காயமடைந்தவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

காணியொன்றுக்குள் இருவர் வேலை செய்துகொண்டிருந்தபோது அங்கு வந்திருந்த குழுவொன்று, மிளகாய்த் தூளை விசிறிவிட்டு அவர்கள் இருவர் மீதும் சரமாரியான வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியிருந்தது.

11

# அநுர அரசாங்கத்தின் மீது மன்னிப்புச்சபை அதிருப்தி!

கொழும்பு, ஒக். 12

இலங்கையின் புதிய அரசாங்கம் கடந்த காலக் கொள்கைகளைத் தொடர்வதற்கும், போர்க்குற்ற ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையை எதிர்ப்பதற்கும் தீர்மானித்தமை ஏமாற்றமளிக்கின்றது என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், சர்வதேச மன்னிப்புச் சபையின் தென்னாசியாவுக்கான பிரதிபிராந்திய இயக்குநர் பாபு ராம் பண்ட் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இலங்கை தொடர்பான

11





மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களின் வேட்புமனு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ம-26)



வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை ஐக்கிய மக்கள் கூட்டணி வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்றுத் தாக்கல் செய்தது. (ம-110)



ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி கண்ணாடிச் சின்னத்தில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளது. முதன்மை வேட்பாளராக ஞானப்பிரகாசம் சுலக்சன் போட்டியிடுகின்றார். (ச-20)

## மக்கள் போராட்ட முன்னணி வன்னியில் வேட்புமனு

வவுனியா, ஒக். 12

வன்னி மாவட்டத்தில் நாடாளுமன்றத்தேர்தலுக்கான வேட்புமனுவை மக்கள் போராட்ட முன்னணி நேற்றுமுன்தினம் தாக்கல் செய்துள்ளது.

முன்னிலை சோசலிசக்கட்சி, புதிய ஜனநாயக மாக்ஸிஸ லெனினிசக் கட்சி, சோசலிச மக்கள் மன்றம், காலி முகத்திடல் போராட்டக் குழு ஆகியன இணைந்து மக்கள் போராட்ட முன்னணியாக நாடு முழுவதும் குடைச் சின்னத்தில் போட்டியிடுகின்றது. (ச-110)







## ஜனநாயக தே. கூட்டணியில் அங்கஜன் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 12

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் தபால் பெட்டிச் சின்னத்தில் ஜனநாயக தேசியக் கூட்டணியில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நேற்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் கையளித்தார்.

கடந்த காலங்களில் அங்கஜன் இராமநாதனை பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தலில் களமிறங்கிய சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் உள்ள காரணத்தினால் அந்தக் கட்சியின் பெயரையோ அல்லது சின்னத்தையோ பயன்படுத்தி போட்டியிட முடியாத சூழ்நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-27)



## தமிழர் விடுதலைக் கூட்டணியில் மாற்றுத்திறனாளருக்கு இடம்

வவுனியா, ஒக்.12

வன்னித்தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை தமிழர் விடுதலைக்கூட்டணி நேற்று வெள்ளிக்கிழமை தாக்கல் செய்தது. வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலயத்தில் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்தக் கூட்டணியில் விசேட தேவையுடைய பெண்ணொருவரும் வேட் பாளராகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார். (ச-110)

## பொதுஜன பெரமுன யாழில் வேட்புமனு

யாழ்ப்பாணம், ஒக். 12

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன யாழ்.மாவட்டத்துக்கான வேட்புமனுவை நேற்றுமுன்தினம் செய்தது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் யாழ். மாவட்ட அமைப்பாளர் தம்பித்துரை ரஜீவ், கீத்நாத் காசிலிங்கம் உள்ளிட்டோர் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர். (ச-27)



ஆனந்த சங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியினர், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை நேற்றுத் தாக்கல் செய்துள்ளனர். (ம-இ)




## யாழ்ப்பாணம், வன்னியில் தேசிய ம. சக்தி வேட்புமனு

யாழ்ப்பாணம், ஒக். 12

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தேசியமக்கள் சக்தி திசைகாட்டிச் சின்னத்தில் யாழ்.மாவட்டத்திலும் வன்னித் தேர்தல் மாவட்டத்திலும் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை நேற்றுமுன்தினம் தாக்கல் செய்துள்ளது. (ச-66,110)




ஸ்ரீலங்கா நாடாளுமன்றத் தேர்தலில், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சி நேற்று தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் வேட்புமனு



யாழ்ப்பாணம், ஒக்.12

சுயேச்சையாகக் களமிறங்கியுள்ள ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை வேட்புமனு வைத் தாக்கல் செய்துள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தலைமையில் வேட்புமனு யாழ்.தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதான பதவிகளில் இருந்து வெளியேறிய நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, தமிழரசின் மகளிரணியைச் சேர்ந்த விமலேஸ்வரி மற்றும் தமிழ்தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரான ஐங்கரநேசன் இன்னும் ஏனைய சில கட்சிகளையும் உள்ளடக்கி ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பு எனும் புதிய அணியை உருவாக்கி சுயேச்சைக் குழுவாக இந்தத் தேர்தலில் போட்டியிடவுள்ளது. (ச-20-125-26)

# தமிழரசுக் கட்சிக்குள் தனிநபர் மேலாதிக்கம்

## சுயேச்சையில் களமிறங்கிய சரவணபவன் சுட்டிக்காட்டு

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் தனிநபர் மேலாதிக்கம் நிறைந்துள்ளது. இதனால் போர்க் காலம் முதற்கொண்டு தொன்றுதொட்டு கட்சிக்காகவும் மக்களுக்காகவும் நின்றவர்கள் வெளியேறவேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரசுக் கட்சியின் ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப் பட்டுள்ளது. தனிநபர் ஆதிக்கத்தால் அங்கிருந்து பலர் வெளியேறிவிட்டார்கள். இறுதியில் தலைவரும் இராஜினாமா செய்தார். நீண்ட காலமாக இருந்த சட்டத்தரணி தவராசாவும் விலகிவிட்டார்.

2009ஆம் ஆண்டு போரின்போது யாழ். மண்ணில் இருந்தவர்கள், அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருக்காத ஒருவரின் ஆதிக்கத்தால் அதிருப்தியிலுள்ளனர். இலங்கை தமிழரசுக் கட்சியின் வீட்டை விட்டு வெளியே வருவதற்கு உண்மையில் எமக்கு விருப்பமில்லை. ஒன்றும் செய்ய முடியாத நிலையில் ஜனநாயகம் மூலம் எமது பலத்தை காட்டவேண்டியிருக்கிறது - என்றார். (ம-20-125)

# படையினரின் கொடுப்பனவு நிறுத்தம் !

பாதுகாப்புப்படை உயரதிகாரிகளுக்கும் முப்படை அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டு வந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு நிறுத்தப் பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் சம்பத் துயகோந்தா தெரிவித்துள்ளார்.

விமானப்படைத் தலைமையகத்தில் விமானப் படை அதிகாரிகள் மத்தியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


இதேவேளை அமைச்சர்கள் பிரதானிகளின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள படையினருக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு கடந்த செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதியுடன் நிறுத்தப்பட் டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-22,6)

# மாற்றுத்திறனாளிக்கு தே.ம. ச. ஆசனம்

கொழும்பு, ஒக். 12

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக தேசிய மக்கள் சக்தி தேசியப்பட்டியலில் மாற்றுத்திறனாளி ஒருவருக்கும் சந்தர்ப்பம் வழங்கியுள்ளது. தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் பட்டியல் தேசிய மக்கள் சக்தி பொதுச்செயலர் நிஹால் அபயசிங்க, மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலர் ரில்வின் சில்வா ஆகியோரால் கடந்த புதன்கிழமை பூரணப்படுத்தப்பட்டது.

தேசியப்பட்டியலில் வர்த்தகர்கள்,கணக்காளர்கள்,மருத்துவர்கள், கலைஞர்கள்,பொறியியலாளர்கள்,சட்டத்தரணிகள், போன்ற பலர் உள்வாங்கப்பட்டுள்ள நிலையில் மாற்றுத்திறனாளி ஒருவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. (ச-6)



# மாலதிக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக். 12

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் வீரமரணமடைந்த முதல் பெண் போராளி மாலதியின் 37 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மன்னார் ஆக்காட்டி வெளியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்றது. (ச-56)

# தினம் தெரியுமோ?

தேர்தலுக்குத் தேர்தல் கட்சி மாறுற ஆக்களைக் கண்டிருக்கிறம். ஆனால் ஒரே தேர்தலிலையே ஒரு கட்சியில இருந்து இன்னொரு கட்சிக்கு மாறி எலக்சன் கேக்கிற சம்பவங்கள் எல்லாம் இப்பதான் நடக்குது. அதுவும் எங்கட தமிழ்ப்பகுதியில தான் இந்தச் சாதனை நடந்தது எண்டது எங்களுக்கும் பெருமை தானே. சைக்கிள் கட்சி வன்னியில தங்கட கட்சியில போட்டியிடுற ஆக்களின்ர லிஸ்ட் ஒண்டை ரெடி பண்ணினவை. அதில லோயர் பொம்பிளை ஒராளும் இருந்தவா. லிஸ்ட் ஓகே எண்டதால, எப்பிடியும் தான் எலக்சனில நிக்கிறது உறுதி எண்டிட்டு, அந்த லோயர் சைக்கிள் சின்னத் தோட தன்ர படத்தையும் போட்டு பேஸ்புக்கில போட்டுவிட, அதை அவாக்கு தெரிஞ்சவை எல்லாம் ஷேர் செய்ய அந்த விசயம் வைரலா கிட்டுது.

அப்பதான் கொஞ்ச 'நெட்டிசன்கள்' இன்னொரு விசயத்தைக் கண்டுபிடிச்சவை. சைக்கிளில எலக்சன் கேக்க வெளிக்கிட்ட அந்தப் பொம்பிளை லோயர், கொஞ்ச நாளைக்கு முதல் வீட்டுக்கட்சியின்ர முக்கியமான ஆளோட நிண்டு அவரைப் படமெடுத்து, அவரைப் புகழ்ந்து போஸ்ட் எல்லாம் பேஸ்புக்கில போட்டுத்தள்ளியிருக்கிறா. அதை நெட்டிசன்கள் ஸ்கீரின்ஷொட் எடுத்து, 'வீட்டுக் கட்சியின்ர விசுவாசி சைக்கிளில ஏறுறா' எண்டு விசயத்தை லீக் ஆக்கிட்டினம். அந்த விசயம் சைக்கிள் கட்சியின்ர மேல்மட்டத்துக்குப் போக, 'அவாவை உடனேயே நிப்பாட்டுங்கோ' எண்டு ஓர்டர் பறந்திருக்குது. சைக்கிளில ஏறி எலக்சனில படம் காட்டலாமெண்டு போஸ்ட்டெல்லாம் போட்ட அந்தப் பொம்பிளை லோயர் இந்த விசயத்தைக் கேள்விப்பட்டு இடிஞ்சு போட்டாவாம். ஆனால் 'என்னோட நிண்டு படமெடுத்ததாலதானே சைக்கிளில சீற் கிடைக்கேலை, அதுக்குப் பரிகாரமா வீட்டிலையே கதிரை தரலாம்' எண்டு வீட்டுக்கட்சியின்ர முக்கியமான ஆள் அவாவை தங்கட வேட்பாளர் பட்டியலில சேர்த்திட்டார்.

இப்ப என்னெண்டால், முதல் அவா சைக்கிளில எலக்சன் கேக்கிறன் எண்டு போட்ட படத்தையும், இப்ப வீட்டில அவா எலக்சன் கேக்கிற படத்தையும் போட்டு பேஸ்புக்கில எல்லாரும் கழுவி ஊத்துகினம். இப்பிடி அந்தக் கட்சி சீற் தராட்டி மற்றக் கட்சியில பாய்ஞ்சு சீற் பிடிக்கிறதைக் கொள்கையா வைச்சிருக்கிறவை, ஒருவேளை எலக்சனில வென்டால் எங்கையெல்லாம் லாபம் வருகுதோ அங்கையெல்லாம் தாவத்தானே செய்வினம். அரசியல் எண்டாலே இப்ப கொள்கை, கோதாரி எல்லாம் தேவையில்லைப் போல.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த (12.10.2022) அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர்

## செல்லையா சண்முகம்

திதி: அபரபட்ச திருதியை



அன்பிற்கு இலக்கணமாய் வந்துதித்த அப்பா!
உங்கள் பாசமான முகம் பார்த்து ஈராண்டு ஆனதே
உங்கள் முகம் காண இன்றுவரை பரிதவித்து
-நிற்கின்றோம்
எங்கள் நிழல் எங்கள் கூடவே வருவது போல
உங்கள் புன்னகை பூத்த முகம் எங்கள் நினைவில்
என்றுமே மறையாது
எங்கள் இதயங்களில் நாம் வாழும் காலம் வரை
எங்களுடன் வாழ்ந்து கொண்டு இருப்பீர்கள் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய மணற்காட்டு
முத்துமாரியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

மணற்காடு,
காரைநகர்.


உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
077 354 8473

பிறப்பு
30.01.1944

இறப்பு
12.10.2022

(cs.52314) (N.1)

# கண்ணீர்விழிகளுடன் ஓராண்டு



## சதாசிவம் தவச்செல்வம்

(உரிமையாளர் செல்வம் கூல்பார் (செல்வம் மாமா - சாவகச்சேரி)

திதி: பூர்வபட்ச தசமி

அன்பு அப்பாவிற்கு கண்ணீருடன்
ஒரு மடல்............

அப்பா அப்பா என்று கூப்பிடவே
ஆசையாய் இருக்கிறதப்பா
இப்பவும் அப்பா என்று
சொல்லாத நாளில்லை

இன்றுடன் வருடம் ஒன்று
நீங்கள் எங்களை
விட்டுச் சென்று எப்படி அப்பா
இவ்வளவு நாட்களும்
எங்களை விட்டுத் தனியே
இருக்கிறீர்கள்

யாருக்கும் தெரியாமல்
இருக்கலாம் ஆனால்
உங்களிற்கு தெரியும்
தானே அப்பா நாங்கள்
உங்களைப் பிரிந்து
இருக்க மாட்டோம் என்று

எறும்பிற்கும் தீங்கிழைக்காத
மனம் எந்த
எதிர்பார்ப்பும் இல்லாமல்
உதவும் குணம்
இவையாவும் இறைவனுக்கும்
பிடித்து விட்டது போலும்

நாங்கள் கோயிலுக்குப்
போகும் போது சில்லறை
மாற்றிக் கொண்டு போவோம்
அர்ச்சனை செய்ய
அப்பா நீங்கள் காசு மாற்றி
வருவீர்கள் அங்குள்ள
யாசகர்களிற்காக
இப்படி எத்தனை குணங்கள்
அப்பா உங்களைப் பற்றி

அதிகம் பேசாத அழகான
உறவு எம் அப்பா
ஒரு புன்சிரிப்பும்
இதயத் தூய்மையுமே
உங்களின் உண்மையான
அழகு இதை எப்போது
இனி காண்போம்
என்ற ஏக்கத்துடனேயே
நாட்கள் நகர்கின்றன

ஆயிரம் ஆயிரம்
கவலைகள் இருப்பினும்
நாங்களே பொறாமை
கொள்ளுமளவு பாசம்
பேரக் குழந்தைகள் மீது
வைத்தீர்கள்

எமக்கென்று தனிப்பெயர்
இருந்தாலும் உங்கள்
பிள்ளைகள் என்று
சொல்லும் போது
நாம் கொள்ளும்
கர்வமே தனி தான்

வருடம் ஒன்று
உங்களை பிரிந்து
அம்மா வாடும்
நிலையை நீங்கள்
உணருவீர்களாக இருந்தால்
மறுபடியும் பூமிக்கே
வந்து விடுவீர்கள் அப்பா

அளவில்லா சந்தோஷம்
சின்ன சின்ன சண்டைகள்
நிறைந்த அழகிய
குருவிக்கூடு
உங்களை இழந்து
தத்தளித்து நிற்கிறது

எதை நினைத்தும்
கலங்காத நாம்
இப்போதெல்லாம்
உங்களை நினைத்தால்
கண்கலங்கி நிற்கின்றோம்
மனம் பலமிழந்துவிட்டது

எல்லோர் வாழ்க்கைச்
சுவரிலும் மரணம்
எழுதப்பட்டிருக்கின்றது
மனிதனாகப் பிறந்தால்
மரணிக்கத்தான் வேண்டும்
என்று தெரியும் அப்பா

இருப்பினும்
உங்களுடைய நிறைவேறாத
ஆசைகள் கனவுகள்
எல்லாம் சுமந்து கொண்டு
நீங்கள் சென்றதை நினைக்க
கடவுளை மட்டுமல்ல
மனிதப் பிறவியையே
வெறுக்க வைத்தது
எம் வாழ்வில் உங்கள் இழப்பு

அப்பா உங்களின்
இறுதி நாட்களும்
இறுதி நிமிடங்களும்
எம் வாழ்வில்
மிகக் கொடுமையான
நாட்கள்
உங்களின் இறுதி நிமிடங்கள்
என்னவெல்லாம் எண்ணி
இருப்பீர்கள்........

அப்பா
உங்களின் அரவணைப்பும்
அன்பு முத்தங்களும்
என்றுமே அழிக்கமுடியாத
பொக்கிஷங்கள்
எம் வாழ்வில்

உங்களைப் பற்றி
நினைக்கும் போதெல்லாம்
எமக்கு ஆறுதல்
சொல்ல வருவது
கண்ணீர் மட்டுமே

கனவுகளும் நினைவுகளும்
தினம் தினம் கண்முன்னே
வந்து கண்ணீரை
மட்டுமே
பரிசாய்
தந்துவிட்டுச் செல்கின்றது

உங்களை சுற்றிச் சுற்றி
வந்தோமே எங்களை
எல்லாம் பரிதவிக்கவிட்டு
நீங்கள் மட்டும்
எங்கு சென்றீர்கள்
அப்பா

திரும்பி வருமுடியாத
தூரத்திற்குப்
போய் விட்டீர்கள்
எப்படியாவது
திரும்பி வரமாட்டீர்களோ
என்றே மனம்
தேடுகின்றது அப்பா!

தவப்பேறு
24.02.1954

சிவப்பேறு
24.09.20

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குறுகும் வாக்களிப்பும் பெருகும் கட்சிகளும்!

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கலுக்கான காலஅவகாசம் நேற்றுடன் முடிவடைந்திருக்கின்றது. வடக்கில் என்றுமில்லாத வகையில் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் தேர்தல் களத்தில் இறங்கியிருக்கின்றன. யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் அடங்கலாக 44 வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. வன்னித் தேர்தல் மாவட்டத்தில் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் அடங்கலாக 47 வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே, இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு மக்களுக்கு நீண்ட வாக்குச் சீட்டு காத்திருக்கின்றது.

தமிழ் மக்களின் உரிமைகளின் போராட்டக்களமாக நோக்கப்பட்ட வடக்கு, கிழக்கு அரசியல்களம் இப்போது சாக்கடை அரசியலாக மாறியிருக்கின்றது. கட்சிகளின் சுயநலம், பதவிகளுக்கான போட்டி என தமிழர் அரசியல் துண்டு துண்டாகச் சிதறியிருக்கின்றது. தமிழ் மக்களின் அரசியல் நம்பிக்கையாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றது. தம்மிடம் எஞ்சியிருந்த ஒற்றை நம்பிக்கையான கூட்டமைப்பு அரசியல்வாதிகளின் சுயநல அரசியலால் சிதறடிக்கப்பட்டதாலும், ஒரு கூட்டுக்குள் இருந்த கட்சிகள் பிரிந்து தனித்தனி வழி போனதாலும் தமிழ் மக்கள் தேர்தல் அரசியல் மீதே வெறுப்புக்கொள்ள ஆரம்பித்திருப்பதை குறைந்து செல்லும் வாக்களிப்பு எண்ணிக்கைகள் உணர்த்துகின்றன. ஆனால் அதை அரசியல்கட்சிகள் உணர்ந்து கொள்வதாகத் தெரியவில்லை. இம்முறை நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் என திருவிழாக் கூட்டம் போல் வேட்பாளர்கள் களமிறங்கியிருக்கின்றனர். தொங்குபறி நிலையில் இருக்கும் தமிழர் அரசியல் கள நிலைமையை இவர்கள் மேலும் சிக்கலுக்கு உள்ளாக்குவார்கள் என்பதில் எந்தச்சந்தேகமும் தேவையில்லை. எவ்வித இலக்கும் இன்றிய இந்த வேட்பாளர்களால் சிதறடிக்கப்படவுள்ள வாக்குகள் நிச்சயம் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எண்ணிக்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதையும் எவரும் மறுக்க முடியாது. வாக்காளர்களும், வாக்களிப்பு வீதமும் குறுகிச் செல்ல, வாக்கரசியலில் ஈடுபடும் கட்சிகளின் எண்ணிக்கை மட்டும் வீங்கிப் பருப்பது ஒட்டு மொத்த தமிழினத்துக்கே ஆபத்தானது.

தமிழ் மக்களுக்கான அரசியல், தெற்கு அரசியலை விடவும் வித்தியாசமானது 'ஏன் ஏனைய நாடுகளை விடவும் வித்தியாசமானது' உரிமை மறுப்புக்கு இலக்கான ஒரு சிறுபான்மை மக்கள் கூட்டம் தங்கள் விடிவுக்கான இறுதி வழியாக அரசியலை நோக்கும் போது, அந்த அரசியலைக் கையிலெடுப்பவர்கள் அதன் கனதியை உணர்ந்துகொண்டிருக்க வேண்டும். ஆனால் தமிழ் மக்களின் துரதிர்ஷ்டம் என்னவென்றால், மக்களைப் பற்றிச் சிந்திக்கும் எவரும் 2009ஆம் ஆண்டின் பின்னர் இல்லை என்பதுதான். தற்போதுள்ள தேர்தல் களமும் அதையே உணர்த்துகின்றது. தமிழ் மக்களின் அரசியல் பலம், அரசியல்வாதிகளின் சுயலாபத்துக்காகச் சிதைக்கப்படவிருக்கின்றது. தெற்குத் தேசியக் கட்சிகள் தமிழர் பகுதிகளில் கோலோச்சுவதற்கு வழி ஏற்படுத்தவிருக்கின்றது. பொல்லாக் காலப்பழிக்குள் எம் அரசியல்வாதிகள் சிக்கப்போவது மட்டும் உறுதி.




# உலக உணவுத் திட்டம் இலங்கைக்கு ஆதரவு

கொழும்பு, ஒக்.12

**இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டத்தைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கு உலக உணவுத் திட்டத்தின் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.**

உலக உணவுத் திட்டத்தின் பிரதிநிதிகள் குழுவினர் நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது இலங்கையில் உணவு நெருக்கடி நிலைமை தற்போது குறைவாக உள்ள போதிலும், தேவை ஏற்படும் போது புதிய வேலைத் திட்டங்கள் மூலம் இலங்கைக்கு ஆதரவளிக்க உலக உணவுத் திட்டத்தின் தலைவர்கள் ஜனாதிபதியின் செயலாளரிடம் விருப்பம் தெரிவித்தனர். (ச-இ)

## பழைய வீடுகளிலேயே அநுர, ஹரிணி

கொழும்பு, ஒக். 12

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோர் ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரிமாளிகை என்பவற்றில் வசிக்கவில்லை எனத் தெரியவருகின்றது.

மாறாகப் பதவிகளுக்கு வருவதற்கு முன்னர் வாழ்ந்த வீடுகளிலேயே அவர்கள் இன்னும் வாழ்கின்றனர்.

இதற்கமைய இராஜதந்திர சந்திப்புகள் உள்ளிட்ட அரச அலுவல்களுக்காக மட்டுமே ஜனாதிபதி அநுர, ஜனாதிபதி மாளிகையைப் பயன்படுத்தி வருகின்றார். பிரதமருக்குரிய உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகையும், அரச அலுவல்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டுவருகின்றது. (ஒ-44)

## ஓய்வூதியருக்கு இடைக்காலக் கொடுப்பனவு

சகல ஓய்வூதியர்களுக்கும் இடைக்காலக் கொடுப்பனவாக 3000 ரூபா வழங்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஓய்வூதியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளபடியால் ஜனாதிபதி இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

அடுத்த வாரம் ஓய்வூதியர்களின் வங்கிக்கணக்குபணத்தை வைப்பிலிடுமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். (ச-6)

## சி.ஐ.டி.க்கு புதிய தலைவர்

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குத் புதிய தலைவராக சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் பி அம்பவில நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் பொலிஸ் தலைமையகத்தில் பணியாற்றி வந்ததுடன், சட்டவிரோதபணப்பரிமாற்றங்கள், பிரமிட் திட்ட மோசடி போன்றவை குறித்த விசாரணை களுக்குபொறுப்பாக செயற்பட்டுள்ளார். சி.ஐ.டி.யின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து வந்த சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ரொகான் பிரேமரட்ண உட்பட ஐந்து பிரதி பொலிஸ்மா அதிபர்களை தேசிய பொலிஸ் ஆணைக்குழு இடமாற்றம் செய்துள்ளது. (ச)

## பாதுகாப்பு மீளாய்வு

கொழும்பு, ஒக். 12

முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் முக்கியமான பிரமுகர்க ளின் பாதுகாப்பு மீளாய்வு செய்யப்படவுள்ளது. இதன் பிரகாரம் முக்கியமான பிரமுகர்களின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினரை திரும்பப்பெறுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சம்பந்தப்பட்ட முன்னாள் அமைச்சர்களுக்கோ, நாடாளுமன்றமுன்னாள் உறுப்பினர்களுக்கோ பாதுகாப்புத் தேவை என புலனாய்வுப்பிரிவு கருதினால் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஒ-6)

## நாளை

13.10.2024

ஞாயிற்றுக்கிழமை - புரட்டாதி - 27

சுபநேரம் : 09.02- 10.32

ராகுகாலம் : 04.32 - 06.02

## நாளொரு நல்வார்த்தை

நேற்றுச் செய்த தவறை ஒப்புக்கொண்டால்
இன்று நீ அறிவாளி ஆவாய்.


- கதே-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்கள்: ஐ. சிவசாந்தன்







யாழ்.வண்ணை வெங்கடேச ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சிகளை தொடங்கலாம். அம்பிகையை தியானித்து வழிபட காரியங்கள் சாதகமாக முடியும்.

**இடபம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். எதிர்பார்த்த காரியம் தாமதமாகும். குழப்பங்கள் ஏற்பட்டாலும், பாதிப்பு இருக்காது. வீண் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாக முடியும். மகிழ்ச்சி அதிகரிக்கும். உற்சாகம் கிடைக்கும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவுகளால் நன்மை உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். துணிச்சலுடன் முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும். கடன் திரும்பக் கிடைக்கும். நற்பலன்கள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்படும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும் காரியங்களை வெற்றிகரமாக முடித்துவிட முடியும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**கன்னி:** உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். லட்சுமி வழிபாடு நன்று.

**விருச்சிகம்** : காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொள்வார்கள். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். மகிழ்ச்சி ஏற்படும். மனவருத்தங்கள் நீங்கும். ஆஞ்சநேயரை தியானித்து வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும்.

**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிகவும் அவசியம். தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பார்த்தகாரியம் அனுகூலமாகும். உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**கும்பம்:** சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். நண்பர்கள் வகையில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். இடையூறுகள் விலகும். பொறுமை அவசியம். ஆஞ்சநேயரை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**மீனம்:** பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துகொள்வது மகிழ்ச்சி தரும். மனவருத்தம் ஏற்படக்கூடும்.



## விதைகள் விநியோகமும் செயன்முறை விளக்கமும்!

யாழ்ப்பாணம், ஒக். 12

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம், மாணவர்களிடையே வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் 'மாணாக்க உழவர்' எனும் வீட்டுத் தோட்டப் போட்டியை நடத்தி வருகின்றது.

இந்த ஆண்டுக்கான போட்டிக்குரிய விதைப் பொதிகளையும் செயன்முறை விளக்கங்களையும் மாணவர்களுக்கு வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் மாணவர்களுக்கு விதைப் பொதிகளையும் நாற்றுகளையும் வழங்கிவைத்துச் செயன்முறை விளக்கங்களையும் அளித்தார். (ச-27)



## முதல் பெண் போராளி மாலதி நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஒக். 12

ஈழ விடுதலைப் போராட்டத்தின் முதல் பெண் போராளி மாலதியின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்.கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

நிகழ்வில் மாலதியின் உருவப்படத்துக்கு முன்பாக ஈகச்சுடர் ஏற்றப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன் அவரது உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (ச-66)






யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம் நடத்தும் வாணி விழா நேற்று வெள்ளிக்கிழமை மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் சிறப்புற இடம்பெற்றது. பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நடன நிகழ்வு, சிறப்புச் சொற்பொழிவு, குழுப் பாட்டு, கதையும் கானமும் போன்ற பல்வேறு கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (ச-66,9)

## ஏடு தொடக்கல் நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 12

நவராத்திரியின் விஜயதசமி நாளான இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சிறார்களுக்கு ஏடு தொடக்கல் நிகழ்வு சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன வளாகத்தில் ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் நடத்தப் படவுள்ளது.

தங்கள் பிள்ளைகளுக்கு ஏடு தொடக்க விரும்புவோர் ஆதீன அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது 0772220103 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ முற்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் நல்லெண்ணத்தை இந்திய மீனவர்கள் மீறுகின்றனர்

## சம்மேளனத் தலைவர் குற்றச்சாட்டு!

யாழ்ப்பாணம், ஒக். 12

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்ற நிலையில் நல்லெண்ண அடிப்படையில் இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்ட போதும் இந்திய மீனவர்களின் அத்து மீறல் தொடர்ந்து இடம்பெறுவதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் மானியத்தை வழங்கியமைக்காக ஜனாதிபதிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். புதிய ஜனாதிபதி அநுர பதவிக்கு வந்த நிலையில் நல்லெண்ண அடிப்படையில் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

ஜனாதிபதியின் நல்லெண்ணச் செயற்பாட்டை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் கடந்த புதன்கிழமை மாதகல் கடற்பரப்பில் எல்லை தாண்டிய இந்திய மீனவர்கள் எமது மீனவர்களின் பெறுமதிமிக்க வலைகளை அறுத்து நாசம் செய்துள்ளனர்.

இந்தச் செயற்பாட்டை நாங்கள் வன்மையாகக் கண்டிப்பதோடு, இந்திய அத்துமீறிய மீனவர்களை தொடர்ச்சியாக கைது செய்து சிறையில் அடையுங்கள் என்ற கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன்வைக்கின்றோம் - என்றார். (ஒ-27)

# வாணி விழா!

யாழ்ப்பாணம், ஒக். 12

வேவில் விக்னேஸ்வரா சனசமூக நிலைய வாணி விழா, தலைவர் த.சிறிதரன் தலைமையில் வேவில் பிள்ளையார் ஆலய முன்றலில் இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை செயலாளர் கணேசன் கம்சநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வல்வை நகரசபை செயலாளர் சத்தியநாதன் கிஷோக் குமார், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை சன சமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் தேவநேசன் தனுஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ம-22)

உ

**தேத்தாவடி கரும்பிமாவடி கந்தசாமி ஆலயம்**

இடம் : மீசாலை டச்சு வீதி, கேணியடி சந்தி

நேரம் : காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை

**பிரபல எண்கணித ஜோதிடர் உங்களுக்கு ஆலோசனைகள் வழங்குவார்**

- நாகதோசம்
- செவ்வாய்தோசம்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- கல்வி
- திருமணம் சம்பந்தமாக

வரும்பொழுது ஒருசீப்பு வாழைப்பழம் எண்ணாமல் வாங்கி வரவும், 5 தேசிப்பழமும் வாங்கி வரவும்.

- கிடைக்கும் பணம் முழுக்க கோயில் கட்டட நிதிக்கு வழங்கப்படும்
- வருபவர்களுக்கு குழைசாதம் வழங்கப்படும்
- கட்டட நிதிக்கு உதவி செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தொடர்புகளுக்கு: A.S.K.K. Ragunathan
077 198 5872, 076 719 8291

(cr/43399) N-1

**வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில்**
**ஆண்டுப் பொதுக்கூட்டமும் பரிபாலன சபைத் தெரிவும்**

மேற்படி ஆலயத்தின் 2024 - 2025 (ஒக்டோபர் 2024 - செப்ரெம்பர் 2025) நிதி ஆண்டிற்கான பொதுக்கூட்டமும், பரிபாலன சபை தெரிவும் எதிர்வரும் 27.10.2024 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி நிதியாண்டிற்கான அங்கத்துவத்தை புதுப்பித்து பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள். சந்தாப்பணம் செலுத்திய அங்கத்தவர்கள் மட்டும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கும் கருத்துரைப்பதற்கும் தகுதியுடையவராவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பரிபாலன சபை சார்பில்

C.M. வரதராஜா
தலைவர்

க.மார்க்கண்டுதாசன்
செயலாளர்

(CS/1596) J-1

# மணிவிழா வாழ்த்து

Congratulations!




எமது பாடசாலையின் முதல்வர்

Best Wishes

உயர்திரு

## ஆறுமுகம் தங்கவேலு

**BED, SLPS - I**

**சேவைக் காலம்.**

- கி/ முழங்காவில் மகா வித்தியாலயம் - 06.08.1988 - 14.01.1990 (ஆசிரியர்)
- யா/ பலாலி ஆசிரியர் கலாசாலை - 15.01.1990 - 31.12.1991 (ஆசிரியர்)
- கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம் - 01.01.1992 - 31.12.1995 (ஆசிரியர்)
- கிளி/ இயக்கச்சி அ.த.க பாடசாலை - 01.01.1996 - 31.12.1996 (ஆசிரியர்)
- கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம் - 01.01.1997 - 22.03.1998 (ஆசிரியர்)
- கிளி/ வேம்பொடுகேணி சி.சி.த.க பாடசாலை - 23.03.1998 - 31.12.2003 (ஆசிரியர்)
- கிளி/ அல்லிப்பளை சி.சி.த.க பாடசாலை - 01.01.2004 - 31.12.2008 (கடமை நிறைவேற்றும் அதிபர்)
- யா/ கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை - 01.01.2009 - 30.11.2010 (ஆசிரியர்)
- யா/ கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை - 01.12.2010 - 08.11.2012 (பதில் அதிபர்)
- யா/ கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை - 09.11.2012 - 08.11.2018 (அதிபர் SLPS 11)
- யா/ கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை - 09.11.2018 - 08.06.2022 (அதிபர் SLPS 1)
- யா/ வரணி மத்திய கல்லூரி - 09.06.2022 - 11.10.2024 (அதிபர்)

**12.10.2024 இன்று மணிவிழாக்காணும் எங்கள் கல்லூரி முதல்வரது ஓய்வுகாலம் சிறப்பாகவும், நலமாகவும் அமையவும் சமூகப்பணி தொடரவும் வாழ்த்துகின்றோம்.**

வாழ்த்துவோர்: **ஆசிரியர் நலன்புரிக்கழகம்**

**யா/ வரணி மத்திய கல்லூரி**

(CR/43381) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 6. வைரவர் கோவில் வீதி, ஆதன இலக்கம் 50 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சின்னக்குட்டி கைம்பெண் பொன்னம்மா என ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

மேற்குறித்த ஆதனத்தை சுப்பையா தம்பையாவும் பெண் நாகம்மாவும் 31.07.196 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சு.செ.மகாதேவா முகதாவில் 2209ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட சீதன உறுதி மூலம் நாகலிங்கம் கந்தையா பெண் பாக்கியத்திற்கு சீதனமாக வழங்கியுள்ளனர். குறித்த உறுதியில் தாயுறுதி இலக்கம் குறிப்பிடப்படாது "2ம் பேர்வழிகாரியின் மாதாவழி முதுசொமும் எங்கள் நாற்பது வருஷத்திற்கு மேற்பட்ட தங்குதடையற்ற இடையறா ஆட்சியும்...." எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிந்த ஆதனத்தை நாகலிங்கம் கந்தையாவும் பெண் பாக்கியமும் 02.11.1982ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ந.தில்லைவிநாயகம் முகதாவில் 1231 ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதியுறுதி மூலம் முத்துராசா சுதாகருக்கு அறுதியாக விற்றுள்ளனர்.

குறித்த ஆதனத்தை முத்துராசா சுதாகர் 17.02.1985 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ந.தில்லைவிநாயகம் முகதாவில் 2105ம் இலக்கத்தில் நிறை வேற்றப்பட்ட அறுதியுறுதி மூலம் நாகலிங்கம் கந்தையா பெண் பாக்கியத்திற்கு அறுதியாக விற்றுள்ளார்.

குறித்த ஆதனத்தை நாகலிங்கம் கந்தையாவும் பெண் பாக்கியமும் 17.02.1985ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ந.தில்லைவிநாயகம் முகதாவில் 2106 ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட சீதன உறுதி மூலம் மார்க்கண்டு ராகுலன் பெண் புஸ்பராணிக்கு சீதனமாக வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சிவியாதெரு இறை "கொட்டையடிவளவு" D.286/48 ல் பதிவு செய்யப்பட்ட நிலபர 1 1/2 ஒன்றரையும் வீடும் நிலம் பயிர்வகைகளும், எல்லை

கிழக்கு :- வேலாயுதர் பொன்னையாவின் ஆதனம்

வடக்கு :- தம்பு பெண் சடையருக்குரிய ஆதனம்

மேற்கு :- ஒழுங்கை

தெற்கு :- முருகேசு சரவணமுத்து பெண் அன்னப்பிள்ளையின் ஆதனம். இதடங்கலும் தற்போது மார்க்கண்டு ராகுலன் பெண் புஸ்பராணி இவ்வாதனத்தைத் தனது பெயரிற்கு ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதி யில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது மாரக்கண்டு ராகுலன் பெண் புஸ்பராணி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**யாழ் மாநகரசபை, யாழ்ப்பாணம்,**

(CR/43395) J-1

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 04 . 03 . 1935 | 09 . 10 . 2024 |



## திருமதி சிவசௌந்தரி ஆறுமுகம்

யாழ்ப்பாணம் உயரப்புலம் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும், கொழும்பு, பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவசௌந்தரி ஆறுமுகம் அவர்கள் கடந்த 09.10.2024 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஐயாகுட்டி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஐயாகுட்டி ஆறுமுகத்தின் ஆருயிர் மனைவியும், வேலாயுதர், சிவமலர், கங்கைமலர், காலஞ்சென்ற உருத்திரமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், ரமணன், ராஜ்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், தம்மி, பாமினி, ஜனகன், பிரதாங்கி, பூரணி ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், காலஞ்சென்ற கதிர்வேற்பிள்ளை, தியாகராசா, சரஸ்வதி, அமிர்தயோகம் மற்றும் தம்பிராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அர்விந், திவ்யா, அனிஷ், டிலன், ஷாயா, நோஆம், கவ்றி, நீரன், மைலன் ஆகியோரின் கொள்ளுப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.10.2024) சனிக்கிழமை காலை 8.30 - 3.00 மணிவரை ஜெயரட்ண பாலர், பொரளையில் பார்வைக்கு வைக்கப்பட்டு, நாளை (13.10.2024) முற்பகல் 9.30 - 11.30 கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்புகள்:**
**ராஜ்குமார் - மருமகன் - 077 4162 800**
**கங்கைமலர்-மகள் - 076 667 3574**

(CS1591) A-1

# மரண அறிவித்தல்

## வேலாயுதபிள்ளை சுகர்ணன் (கருணா)

(BA (HON) ACMA GCMA, உரிமையாளர் - Sugar & Spice (UK) நிர்மல் தோட்டம் இயக்கச்சி)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01.01.1972 | 03.10.2024 |

யாழ். மீசாலையைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டன் Edgware ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வேலாயுதபிள்ளை சுகர்ணன் (Sugar & Spice, நிர்மல் தோட்டம் இயக்கச்சி உரிமையாளர்)அவர்கள் கடந்த 03-10-2024 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை (Station Master, மீசாலை) ராஜபூபதி தம்பதியரின் பாசமிகு இரண்டாவது மகனும், யோகராஜா (குறிஞ்சி ஜவுளி சமுத்திரம்) மாலினி தம்பதியரின் பாசமிகு மூத்த மருமகனும், ஜனனி அவர்களின் அன்புக் கணவரும், சியாம், ஹரிஷ், ஹாசினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகந்தன் (லண்டன் UK), சுகுணன் (கனடா), சுகிர்தன் (லூட்டன் UK) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிருந்தினி - பிறின்சி, மயூரி ஆகியோரின் மைத்துனரும் துஷாந்தன், ஷியாமளன், Dr.தனேஷ்வரன், விஜயகுமார் ஆகியோரின் சகலனும் ரூபினி, காயத்திரி, வினுஜா, ரம்யா ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிதாஷா, நிஷேன்-கவின் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், கிருஷ்ணி, துவாரக், கிஷோன், அஞ்சனா, கதிர், ரிஷிக், ஜான்வி, யாத்ரன், தீரன், விஹான் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், மஹாதேவா மற்றும் கோடீஸ்வரன், லோகேஸ்வரன் (Rabeena) ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற தேனம்மா, மற்றும் கணேஸ்வரி, சுப்புலட்சுமி, ரஜனி ஆகியோரின் பெறாமகனும், லோகேஸ்வரி, காலஞ்சென்ற தியாகேஸ்வரி ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான கந்தசுவாமி, குணரத்தினம் மற்றும் வேலாயுதம் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (13.10.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 - 9 மணி வரை Sugar & Spice lounge 12-13 Queensbury station, HA85NR Queensbury roundabout என்னும் இடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 9.00 - 1.00 மணி வரை The Hive மண்டபத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் Hendon Cemetery இல் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

**தொடர்புகளுக்கு:**

| | | |
|---|---|---|
| ஜனனி | - மனைவி | (+447886924987) |
| சியாம் | - மகன் | (+447477016040) |
| ஹரிஷ் | - மகன் | (+447491988236) |
| சுகந்தன் | - அண்ணா | (+447802856666) |
| சுகுணன் | - தம்பி | (+16477403784) |
| சுகிர்தன் | - தம்பி | (+447939123989) |

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/43394) J-!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்புமனு நிராகரிப்பு

ஜனநாயக தேசிய முன்னணி சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட வேட்புமனுவை தாக்கல் செய்திருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது. (ம)



# 141 பயணிகளுடன் வட்டமடித்த விமானம்

## தமிழகத்தில் நேற்று இரவு திக்திக்

சென்னை, ஒக். 12

திருச்சியில் இருந்து சார்ஜா நோக்கி நேற்று மாலை புறப்பட்ட விமானம், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக வானில் இரண்டரை மணிநேரம் வட்டமடித்தபின் திருச்சி விமான நிலையத்தில் தரையிறங்கியது.

விமானம் பத்திரமாகத் தரையிறங்குமா அல்லது அசம்பாவிதங்கள் நேர்ந்துவிடுமா? என்பது தொடர்பில் பெரும் ஐயப்பாடுகள் எழுப்பப்பட்ட நிலையில், ஒட்டுமொத்த இந்தியாவையும் பரபரப்புக்குள் உள்ளாக்கிய விடயமாக நேற்று இரவு இது அமைந்திருந்தது.

லாண்டிங் கியரில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறால் விமானத்தின் சக்கரங்கள் உள்ளே செல்லவில்லை. இதையடுத்து விமானம் தன் பயணத்தைத் தொடராமல், மீண்டும் திருச்சி விமான நிலையத்துக்கே திரும்பியுள்ளது. விமானத்தை பலமுறை தரையிறக்க முயற்சித் போதிலும், எந்தப் பயனும் ஏற்படவில்லை. இதனால், சுமார் இரண்டரை மணிநேரம் விமானம் வானில் வட்டமடித்துக் கொண்டிருந்தது.

விமானம் வானில் வட்டமடித்துக் கொண்டிருந்த சமநேரத்தில், விமான நிலையத்தில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டதுடன், மருத்துவர்கள் குவிக்கப்பட்டுள்ளனர்.

விமானத்தில் இருந்த 114 பயணிகளையும் பணியாளர்களையும் ஒரே நேரத்தில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லக்கூடிய ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இறுதியாக, விமானம் தரையிறங்கப் போதுமான பெற்றோல் போக மீதிப் பெற்றோல் தீர்ந்துபோகும் அளவிற்கு விமானம் வானில் வட்டமடித்துள்ளது. தரையிறங்கும்போது தீவிபத்து ஏற்பட்டால், தீ மேலும் தீவிரம் பெற்றுவிடக்கூடாது என்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர், விமானத்தைத் தரையிறக்கும் இறுதி முயற்சி வெற்றியளித்துள்ளது. பயணிகள் அனைவரும் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர். விமானிக்கு தமிழக முதல்வர் உட்பட பலரும் தமது பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர். (ம)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**திருமதி கைலேஸ்வரி பாலசிங்கம்**

திதி : விஜயதசமி

பாசத்துடன் அரவணைத்து
பண்புடனே வளர்த்து - எங்களை
பாரினிலே வாழ்வாங்கு வாழ வைத்த - தாயே !
இவ்வுலகு விட்டு அவ்வுலகு சென்ற - உங்களை
முதலாண்டு நினைவு திதியில்
நினைந்து வணங்குகின்றோம் - அம்மா !

572/8, "கைலை வாசா"
கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டி

(CS/56410) J-1

## 10ஆம் ஆண்டு நினைவலைகள்

**ஜெனர்த்தனன் அச்சுதன்**
(A/L, 2012ஆம் ஆண்டு
யாழ்.இந்து க.ப.மாணவன்)

பிறப்பு 23.07.1993
இறப்பு 03.10.2014



நிலையில்லா இவ்வுலகில்
நிலைத்து விட்ட உன் நினைவால்
நினைவிழக்க முடியாமல்
10 ஆண்டுகளாக
நின்னையே நினைக்கின்றோம்
இதயத்தில் வேதனையை
சுமக்கின்றோம்.

திதி:விஜயதசமி

No.13, கோகுலமஹால் புடவையகம்
நவீன சந்தை மேல் மாடி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா

# மரண அறிவித்தல்



மண்ணில் 13 06 1957
விண்ணில் 05 10 2024

திருமதி
**விமலேந்திரன் இராஜேஸ்வரி( ராசு).**

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் 4 ஆம் வட்டாரம் வேலணையை வாழ்விடமாகவும் தற்போது இந்தியா சென்னையில் வசித்து வந்தவருமான திருமதி விமலேந்திரன் இராஜேஸ்வரி கடந்த 05.10.2024 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வேலணை 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த முத்துலிங்கம் விமலேந்திரன் (விமல் கூல்பார்- வங்களாவடிச் சந்தி) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாலகிருஷ்ணன் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம் - பகவதி தம்பதியரின் அன்பு மருமகளும், சந்துரு (B.H.M - U.K) , கௌதம் (B.E India), சௌபா (M.E Aerospace - Canada), ராஷ்மி ( M.E Aeronautical - Canada) ஆகியோரின் ஆருயிர் அன்னையும், துஷா (B.S.E - U.K), ஜெய்வாஹினி (M.E - Canada), பானுதைா (Aeronautical - Canada ), மன்ஜித் ( Aeronautical - Canada) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அகஸ்தியாவின் அன்பு அப்பம்மாவும், பரமேஸ்வரி, ராஜலட்சுமி, விஜயகுமாரி, பிரேமகுமாரி, ராஜ்குமார், காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன், சுரேஷ்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலேந்திரன், குலேந்திரன், கணேஸ்வரி, காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.10.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் வேலணையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

4 ஆம் வட்டாரம்,
வேலணை.

தகவல்
குடும்பத்தினர்
076 822 0139

# கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்திய சாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திரு.ஞானப்பிரகாசம் கிறிஸ்ரிராஜா** அவர்களின் அன்புத் தந்தை

**திருட்செல்வம் ஞானப்பிரகாசம்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரி சங்கம்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(CS/56428) J-1

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 08.09.2024 சிவன் தாழ் சேர்ந்த

**அமரர் கனகசபாபதி நமநாதன்**

(முன்னாள் காணி குடியேற்ற அதிகாரி, பிரபல சட்டத்தரணி)



பிறப்பு 23.06.1938
மறைவு 08.09.2024

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (13.10.2024) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

55, பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.


குடும்பத்தினர்.

(CS/56426) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
28 . 05 . 1946



இறப்பு
11 . 10 . 2024

## பாலசிங்கம் நாகநாதபிள்ளை

சரவணை மேற்கு வேலணையை பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் நாகநாதபிள்ளை நேற்று (11.10.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் - நகுலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், நடராசா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சிவகாமசுந்தரியின் பாசமிகு கணவரும், வினோதினி (லண்டன்), வினோதீபன் (சுவிஸ்), வினோராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசதுரை பகீரதன் (லண்டன்), துர்க்காயினி (சுவிஸ்), பிரியங்கா (இணுவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தங்கவேல், காலஞ்சென்ற ஞானவேல், அஞ்சலாதேவி (பிரான்ஸ்), புஸ்பலீலா (சுவிஸ்), தற்பரநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியர், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நவரத்தினராசா (இணுவில்), காலஞ்சென்ற சிவலோகநாதன், சண்முகராசா (இணுவில்), காலஞ்சென்ற ஸ்ரீகாந்தராசா, மகேஸ்வரி (இணுவில்), ஸ்ரீரஞ்சன் (சுவிஸ்), செல்வராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், விஷால், அபிஷா, அஷ்வரன், ஆதிஷன், அக்ஷரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள்.**

(CS1597) A-1

# மரண அறிவித்தல்

மலர்வு
18 . 12 . 1946



உதிர்வு
11 . 10 . 2024

## கந்தையா சுந்தரலிங்கம்

அளவெட்டியை பிறப்பிடமாகவும் மாட்டின் வீதியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சுந்தரலிங்கம் அவர்கள் நேற்று (11.10.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிதம்பரபிள்ளை - அமுதம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதி, சர்வேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற துஷ்யந்தி, துஷ்யந்தன் (கனடா), நிஷாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதாகர் (இத்தாலி), ரோகா, சதீஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுசன், விதுசன் (இத்தாலி), ஹர்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.10.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள்.**
**077 29 75 366**
**077 54 89 190**

**மாட்டின் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS 1600) A-1

# மரண அறிவித்தல்



## இரத்தினம் ஜெயகுமாரன்

**தோற்றம்** 27.08.1959 **மறைவு** 11.10.2024

நீதிமன்ற வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் இணுவில் மானிப்பாய் வீதியை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் ஜெயக்குமாரன் அவர்கள் நேற்று (11.10.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஈஸ்வரி ஜெயக்குமாரனின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான சொர்ணலிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், விக்னேஸ்வரி, காலஞ்சென்ற ஸ்ரீதரன் இரஞ்சிதமலர் மற்றும் உதயகுமார், செல்வகுமார், காலஞ்சென்ற ராகினி மற்றும் ரஜனி சதீஸ்குமார் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.10. 2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**சசிகரன்: 077 899 3687**
**சதீஸ்குமார்: 077 949 8048**

(CS 1598) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாழமுக்கம்...

புவியியல்துறையின் தலைவரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் நாளைமறுதினம் (நாளை) தாழமுக்கம் ஒன்று வலுப்பெறச் சந்தர்ப்பங்கள் உள்ளன. இது எதிர்வரும் 15ஆம் திகதியளவில் வடமேற்குத் திசை நோக்கி நகர்ந்து அதன்பின் 18ஆம் திகதி அல்லது 19 ஆம் திகதியளவில் தமிழ்நாட்டின் வடக்குப் பகுதிக்கும், ஆந்திராவின் தெற்குப் பகுதிக்கும் இடையில் ஆழ்ந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலமாகக் கரையைக் கடக்கும் வாய்ப்புள்ளது.

இந்தத் தாழமுக்கத்துடன் இந்த ஆண்டுக்கான வடகீழ்ப் பருவக்காற்றின் உடைவும் ஏற்படும். எனவே, 13ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கனமானது முதல் மிகக் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது - என்றார். (அ-ம-66-555)

## அநுர...

தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளமை இலங்கையில் காணப்படும் மனித உரிமைகள் கரிசனை குறித்து சர்வதேச சமூகம் தொடர்ந்தும் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் விதத்தில் அமைந்துள்ளது.

புதிய தீர்மானத்தின் மூலம் ஆணை நீடிக்கப்பட்டமை பொறுப்புக்கூறலுக்கு ஆதரவளிப்பது வரவேற்கத்தக்க விடயம். எனினும் இந்தத் தீர்மானம் மேலும் ஒரு வருடகாலத்துக்கு மாத்திரம் நீடிக்கப்பட்டுள்ளமையும், இலங்கையின் புதிய அரசாங்கம் கடந்த காலக் கொள்கைகளைத் தொடர்வதற்கும் ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையை எதிர்ப்பதற்குத் தீர்மானித்துள்ளமையும் ஏமாற்றமளிக்கின்றது.

அத்துடன், பொறுப்புக்கூறலை நிறைவேற்ற அரசாங்கம் தயாரில்லை என்ற சந்தேகத்தையும், ஆழமாக வேரூன்றியுள்ள தண்டனையின்மைப் போக்கையும் தொடரும் ஆபத்தையும் இது ஏற்படுத்தியுள்ளது. ஆதலால், இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் சர்வதேச சமூகம் நீதி, உண்மை, இழப்பீட்டு விவகாரங்களில் அர்த்தபூர்வமான முன்னேற்றத்தை அடைவதற்காக இலங்கை அரசாங்கத்துடன் தொடர்ந்தும் ஈடுபாட்டை பேணவேண்டும் - என்றார். (அ-ம)

## இன்றுமுதல்...

மாவட்ட ரீதியில் கூட்டங்களை நடத்துவதற்கும், 22 தேர்தல் மாவட்டங்களிலும் 22 பிரதானக் கூட்டங்களை நடத்துவதற்கும் திட்டமிட்டுள்ளன. அத்துடன், மாகாணம் மற்றும் மாவட்டங்களை மையப்படுத்தி செயற்படும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்கள் என்பன அதற்கேற்ற வகையில் கூட்டங்களை நடத்தவுள்ளன.

தேசிய மக்கள் சக்தியின் பிரதான பரப்புரைக் கூட்டங்களில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பங்கேற்பார் எனத் தெரியவருகின்றது. ஐக்கிய மக்கள் கூட்டணியின் பிரதான பரப்புரைக் கூட்டங்களில் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பங்கேற்பார். அந்தக் கூட்டங்களில் மாவட்டத்தில் உள்ள அனைத்து வேட்பாளர்களும் பங்கேற்கவுள்ளனர்.

அதேவேளை, சிலிண்டர் கூட்டணியின் பரப்புரைக் கூட்டங்களில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பங்கேற்க வைப்பதற்குரிய முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. அது கைகூடாத பட்சத்தில் மாவட்ட தலைவர்கள்தான் பரப்புரையை வழிநடத்த வேண்டிய நிலை ஏற்படும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, பெரமுனவின் ஓரிரு கூட்டங்களில் மாத்திரமே பங்கேற்கக்கூடும். மற்றும்படி நாமல் ராஜபக்சவே கட்சியை முழுமையாக வழிநடத்தவுள்ளார். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்டவர்கள் வடக்கு, கிழக்குக்கும் பிரசாரத்துக்காக வருகை தரவுள்ளனர். இன்று ஓரிரு பகுதிகளில் பிரசாரம் இடம்பெற்றாலும் திங்கள் முதலே அரசியல் களம் சூடுபிடிக்க ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-44)

## 196...

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்ததாவது:-

பொதுத்தேர்தலுக்காக 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் 764 குழுக்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன எனவும், அவற்றுள் 74 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்திலேயே அதிகளவான குழுக்கள் போட்டியிடுகின்றன. அம்மாவட்டத்தில் 72 குழுக்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தன. அவற்றில் 8 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் 64 குழுக்கள் போட்டியிடுகின்றன. பொலன்நறுவை மற்றும் குருணாகலை மாவட்டங்களில் குறைந்தளவான குழுக்கள் போட்டியிடுகின்றன. அவற்றின் எண்ணிக்கை 15 - என்றுள்ளது. (அ-ம-44)

## அணுவாயுதத்துக்கு...

அமைதிக்கான நோபல் பரிசினை அறிவிக்கும் போது, நோர்வேஜியன் நோபல் குழு, ஹிரோஷிமா மற்றும் நாகசாகி அணுகுண்டுத் தாக்குதலில் உயிர் பிழைத்தவர்களை, அவர்களின் விலைமதிப்பில்லா அனுபவங்களின் மூலம் அமைதிக்கான நம்பிக்கையை விதைப்பதற்காகக் கௌரவித்தது.

பலமுனைப் போர்கள் காரணமாக, எந்நேரமும் அணுகுண்டுத் தாக்குதலை எதிர்கொள்ளலாம் என்ற அச்சம் உலகில் இன்று வலுவாகவே ஆட்பட்டுள்ள நிலையில், அமைதிக்கான நோபல் அணுவாயுதத்துக்கு எதிரான வாழ்நாள் செயற்றிட்டங்களைக் கொண்ட அமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## வடக்கில்...

**யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்**

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இம்முறை 23 அரசியல் கட்சிகளும், 21 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடவுள்ளன. இரண்டிலுமாகச் சேர்த்து 396 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். இது தொடர்பில் யாழ்ப்பாணம் பதில் மாவட்டச் செயலரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக 23 அரசியல் கட்சிகளும், 23 சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுக்களைக் கையளித்திருந்தன. இவற்றில் இரண்டு சுயேச்சைக் குழுக்களின் வேட்பு மனுக்கள் உரிய காரணங்களைக் குறிப்பிட்டு நிராகரிக்கப்பட்டுள்ளன. இதன்படி, இம்முறை 23 அரசியல் கட்சிகளும், 21 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடவுள்ளன. அத்துடன், தேர்தல் தொடர்பான தெளிவூட்டல் சுயேச்சைக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. சுயேச்சைக் குழுக்களின் செலவீனங்கள் தொடர்பான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன - என்றார்.

**வன்னித் தேர்தல் மாவட்டம்**

இதேவேளை, வன்னியில் இருந்து 22 அரசியல் கட்சிகள் மற்றும் 25 சுயேச்சைகள் என 47 தரப்பினர் போட்டியிடவுள்ளனர்.

வவுனியா மாவட்டச் செயலரும், வன்னி தேர்தல் தெரிவித்தாட்சி அலுவலருமான சரத்சந்திர இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக 24 அரசியல் கட்சிகள் மற்றும் 27 சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இவற்றில் இரண்டு அரசியல் கட்சிகள் மற்றும் இரண்டு சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் உரிய காரணங்கள் குறிப்பிடப்பட்டு நிராகரிக்கப்பட்டுள்ளன. 47 கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தேர்தலில் போட்டியிடவுள்ளன - என்றார். (அ-ம-110-20-26-66)

## போர்க்...

என சட்டத்தரணிகள் சங்கத் தலைவரும் ஐ.நா. சர்வதேச குற்றவியல் நீதிமன்ற ஆலோசகராகப் பணியாற்றியவருமான மெதகொட தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2009ஆம் ஆண்டு ஜனவரி முதல் இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டதாக அமெரிக்க காங்கிரஸ் ஜனாதிபதிக்கு ஓர் அறிக்கையை அனுப்பியிருந்தது. அந்த அறிக்கையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவில் நானும் ஓர் உறுப்பினராக இருந்தேன். கண்மூடித்தனமான கொலைகள் நடந்துள்ளதாகவும், சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் கடுமையாக மீறப்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட் டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஒரு நாடாக நாம் அந்தக் குற்றச்சாட்டு களை ஆராயவேண்டும். எமது ஆயுதப்படைகளும் பொலிஸாரும் போர்க்குற்றங்களை இழைத்ததாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும் போது, அந்தக் குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்படவேண்டும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆயுதப் படைகளில் அல்லது வேறு எங்காவது போர்க் குற்றச் செயல்களுக்குப் பொறுப்பான நபர்கள் இருந்தால், அவர்கள் மீது வழக்குத் தொடரவேண்டும்.

இல்லையேல், சர்வதேசப் பொறிமுறைகள் ஊடாக அவர்கள் உலகில் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் கைது செய்ய நேரலாம். இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு என்ன நடந்தது. அவருக்கு எதிராக போர்க் குற்றங்களுக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவரது பயணத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. தேவைப்பட்டால், அந்த நபரை சர்வதேச குற்றவியல் நீதிமன்றப் பிடியாணையின் அடிப்படையில் கைதுசெய்யலாம். எனவே, இவற்றுக்கு முன்பாக போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை நாம் மேற்கொள்ள வேண்டும். ஏனெனில், எமது நீதிமன்றங்களில், எமது நீதித்துறைக்குள் வழக்குகள் நடத்தப்படுவது சிறப்பானது -என்றார். (அ-ம-6)

## ஓமந்தை...

இளங்கோ (வயது -38) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தார். திலீபன் (வயது - 42) என்பவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில், அவர் சிகிச்சையின் போது நேற்று உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-110)

## பச்சிளம்...

இறப்புக்கான காரணங்கள் கண்டறியப்படாத நிலையில், மாதிரிகள் இரசாயனப் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

**தேவை**
நல்லூரில் சிறிய வளவு புற்கள் வெட்டி. துப்பரவாக்க கூடிய வேலையாள் தேவை.
**0777 88 73 60**

**காணி விற்பனைக்கு**
1. கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் 2 பரப்பும் 3.6 குழி காணி உடனடி விற்பனைக்கு உண்டு.
பிரதான காப்பெற் காணியிலிருந்து மூன்றாவது காணியாகவும் சிறந்த அயற் சூழலையும் கொண்டுள்ளது.
2. உரும்பிராய் சிவகுல வீதியில் இரண்டு பரப்புக்களாக பிரிக்கப்பட்ட 7 சிறந்த காணித் துண்டுகள் நியாயமான விலையில் விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு: சாய்ராம்
**077 1329 682**
(CS 1594) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமை கல்வி நிறுவனம்

சோதி வேம்படி ஒழுங்கை, மானிப்பாய்
(சத்தியசாயி பாடசாலையிலிருந்து 100 m தூரத்தில்)

**தரம் - 4 (2026), தரம் - 5 (2025)**
மாணவர்களுக்கான புலமைப்பரிசில்
புதிய வகுப்புக்கள் விஜயதசமி அன்று ஆரம்பம்
12.10.2024 சனிக்கிழமை (விஜயதசமி அன்று)
ஆசிரியர் திரு. க. கலாமோகன் (B.A,P.G.D.E, Dip. in. Teach)

தரம் - 4 (தற்போது தரம் - 3) நேரம்: மாலை 3.10 மணி
தரம் - 5 (தற்போது தரம் - 4) (நேரம்: மாலை 4.00 மணி
பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால்
பதிவுகளுக்கு முந்தவும்

தொடர்பு: 077 212 1915 (cs.1580) (N-1)

## செம்மொழி

கல்வியகம் -தாவடி
(தாவடிப் பாடசாலைக்கு அருகில்)

தமிழ்மொழியும்
இலக்கியமும்
**தரம்-6** ற்கான புதிய வகுப்பு

இன்று விஜயதசமி நன்னாளில்
மாலை 3.00 மணிக்கு
ஆரம்பமாகவுள்ளது.
(தை மாதம் வரை கட்டணம்
அறவிடப்படமாட்டாது.)

ஆ.பிருந்தாபன்
077-2550807

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

2025 ம் ஆண்டு தரம் ஆறு
மணவர்களுக்கான இரண்டாம் மொழி
சிங்களம் புதிய பிரிவுகள் ஆரம்பம்.
விஜயதசமி 12.10.2024 மாலை 3.00 மணி
இடம் - இலங்கை வேந்தன் மண்டபம் அருகில்
கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்

077 990 6867, 077 214 0220

## விற்பனைப்பிரதிநிதிகள் தேவை

யாழ்ப்பாணம் கோண்டாவிலில்
இயங்கிவரும் எமது
FAB LANKA(PVT)LTD நிறுவனத்திற்கு
தகுதி வாய்ந்த விற்பனைப்
பிரதிநிதிகளை எதிர்பார்க்கின்றோம்.
அனுபவம் உள்ளவர்களுக்கு
முன்னுரிமை அளிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 006 9333 (CS/56427) J-1

பதிவுகள்
ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர்
இலவச விசா
காத்திருக்காமல்
உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும்
அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும்
தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன்
நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம்
A/L
எடுக்கிறவர்களும்
விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226244

## TECHNO WORLD

A/L தொழில்நுட்பப்பிரிவு

## விசேட செயலமர்வு

**15,16,17 October 2024**
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்

**18,19 October 2024**
பொறியியல் தொழில்நுட்பவியல்
உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்

**20,21 October 2024**
ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம்

இடம் - வெலிங்டன் சந்தி, லிங்கம்
கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 017 5346 (cr.43368) (J-1)

## அகரம் உயர் நிலைக் கல்லூரி

AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன் துறைச்சாலை

மல்லாகம் | கொக்குவில்

புதிய தரம் 06 தமிழ்மொழி மூல ஆங்கிலமொழி
வகுப்புக்கள் ஆரம்பம்

12.10.2024 [சனிக்கிழமை]
விஜயதசமி நன்னாளில்
நேரம்
மாலை - 3.02 முதல் 4.32 வரை

புதன் முதல் வெள்ளி வரை
மாலை 2.00 மணியில் இருந்து 6.00 மணி வரை
சனி, ஞாயிறு தினங்களில் காலை 7.00 மணியில் இருந்து
மாலை 6.00 மணி வரை
பெற்றுக்கொள்ளமுடியும்.

(ஆரம்பிக்கும் நாள் முதல் ஜனவரி 16 வரை
இலவசமாக வகுப்புக்கள் நடைபெறும்.)

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"
இயக்குநர்

## கணிதம், வரலாறு

**09 - O/L, A/L வகுப்புக்கள்**
மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப தனியாகவோ,
குழுவாகவோ வீடுகளுக்கு வந்து அடிப்படையில் இருந்து
கற்பிக்கப்படும் தேசிய ரீதியாக சிறந்த பெறுபேறுக்காக
வழிகாட்டும் உங்கள் ஆசான்.

T.P.:077 482 5438 (cs 1589) (N-1)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பிரபல
தொழிற்சாலை ஒன்றிற்கு பின்வரும்
வேலையாட்கள் தேவை.
- கனகரகவாகன சாரதிகள்
- பொதி செய்பவர்கள்

076 368 1315 (cs 56413) (N-1)

# மரண அறிவித்தல்

## மார்க்கண்டு பேராயிரவன்



தோற்றம் 23.10.1948 — மறைவு 10.10.2024

அராலி தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு பேராயிரவன் நேற்றுமுன்தினம் (10.10.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - பெரியம்மா தம்பதியரின் ஏக புதல்வனும், மட்டுவில் வடக்கை சேர்ந்த காலஞ்சென்றவர்களான சிவசம்பு - யோகாம்பிகை தம்பதியரின் பாசமிகு மருமகனும், சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், ரஜனி, பிரதாபன், ஜெயதீபன், குமரன் ஆகியோரின் அருமைத் தந்தையும், சத்தியன், பிரதீபா, திவாகரி, தர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், ரெஷ்மி, அருணா, ஜஸ்னவி, ரெஷ்னா. பிரணவி, கார்த்திகன், அன்பினி, கீர்த்திகன் ஆகியோரின் ஆசைப் பேரனும், காலஞ்சென்ற நகுலேஸ்வரி மற்றும் நகுலேஸ்வரன், கேதீஸ்வரி, விக்கினேஸ்வரன், கணேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ராசமணி மற்றும் தம்பாப்பிள்ளை, சாந்தநாயகி, காலஞ்சென்றவர் களான கணபதிப்பிள்ளை, மங்கையற்கண்ணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.10.2024) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 9.00 மணியளவில் பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி தெற்கு,
மாதாங்கோவிலடி.

தகவல்:
குடும்பத்தினர்
076 831 8296
077 874 6384
(CS/56370) N-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.10. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org